


தலைமைச் செயலகத்தில் நேற்று (30.06.2025) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் சா. விஜய ராஜ்குமார், சிறப்புச் செயலாளர் திருமதி வ.கலையரசி, மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத், , பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் முனைவர் சீ.சுரேஷ் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பரிதி இளம்சுருதி எம்.சி. தலைமையில்

# எழும்பூர் 99-வது வார்டில் விழிப்புணர்வுப் பிரச்சாரம்!

சென்னை, ஜூலை 1 -

தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் .பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, நேற்று (28-06-2025) எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு ஆலோசனைப்படி, திமுக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி தலைமையில், எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99 வது வாடில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், என் குப்பை எனது பொறுப்பு நெகிழி விழிப்புணர்வு நிகழ்வை துவங்கி வைத்து, சாலையோரம் உள்ள கடைகள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டது.,

இதில் 99வது வார்டு கோட்ட பொறியாளர் கே.சிவகுமார் அவர்கள், துப்புரவு ஆய்வாளர் ஜி கிருஷ்ணமூர்த்தி, மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் உடன் இருந்தனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி தி.மு.க. சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு நல்லூர் ஊராட்சியில் அடங்கிய அம்பேத்கார் பேருந்து நிலையம் அருகில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கும் அரிசி, காய்கறி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் பொன் கோதண்டன், ப.சேகர், சே.அரசு, ப.சீனிவாசன், நா. பரசுராமன், இளைஞரணி அமைப்பாளர் என்.ஜெகன், கே.கண்ணன், கணேசன், பாலவிக்னேஷ், மணிகண்டன், மோகன், சரவணன், வெற்றி, டேனியல், ஜீவா. சுதாகர். கார்த்திக் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர். சி.சிவசங்கர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

### 1938 இல் பெரியார் தொடங்கிய இந்தித் திணிப்பு எதிர்ப்பு

# இன்று மராட்டியத்தில் வெடித்து வெற்றிக் கனி பறிக்கிறது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை

**சென்னை, ஜூலை 1 -**

**1938இல் பெரியார் தொடங்கிய இந்தித் திணிப்பு எதிர்ப்பு இன்று மராட்டியத்தில் வெடித்து வெற்றிக் கனி பறிக்கிறது! சமஸ்கிருதம் - இந்தியைத் திணிக்கும் ஆர்.எஸ்.எஸ். சின் ஆசையும், ஆணையும் ஒரு போதும் நிறைவேற முடியாது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:**

மகாராட்டிர மாநிலத்தில் பலம் வாய்ந்த கட்சியாகத் திகழ்ந்து வந்த சிவசேனையைப் பயன்படுத்தி, அதன் முதுகில் ஏறி, சில ஆண்டுகள் பயணம் செய்து, தங்களது ஆட்சிக் கனவை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. நிறைவேற்றிக் கொண்டது!

அதன் பிறகு ‘ஆயாராம், காயாராம்’ அரசியல் பேரங்களால் அக் கட்சியைப் பிளந்து, பிரிவினைக்குப் பெரிதும் ஒத்துழைத்த ‘பாஸ்கரராவ்’களை (முன்பு ஆந்திராவில் கட்சி மாறியவர்) துணைக் கொண்டு சிவசேனா - காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை மாற்றினார்கள்.

**தேர்தல் வித்தைகளும் ஆர்.எஸ்.எஸ். அஜெண்டாவும்**

அடுத்து நடந்த தேர்தலில் பல வித்தைகளால் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் சுட்டிக்காட்டியது போல, எப்படியோ வெற்றியைப் பறித்து பழைய முதலமைச்சர் ஷிண்டேவிடமிருந்து முதலமைச்சர் பதவியை அபகரித்து, மேனாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் தேவேந்திர பட்னாவிஸ் என்ற உயர் ஜாதியினரையே மீண்டும் தாங்கள் திட்டமிட்ட படி முதலமைச்சராக்கி, தங்களது மறைமுக அஜெண்டாவை நிறை வேற்றிக் கொண்டது ஆர்.எஸ்.எஸ்.!

தங்களது முகமூடியைக் கழற்றி விட்டு, மும்மொழித் திட்டம் என்ற பெயரில் கல்வியைக் காவிமயமாக்கி, சமஸ்கிருத - ஹிந்தி திணிப்புக்குத் தொடக்கமாக ஹிந்தி மொழி ஆரம்பப்பள்ளிகளில் கட்டாயம் என்று பகிரங்கமாகவே அறிவித்து, ஆணை பிறப்பித்து ஆர்.எஸ்.எஸ். தங்களது திட்டத்தை நிறைவேற்றியது, ஹிந்தி மாநிலமல்லாத மகாராட்டிராவுக்கு அதிர்ச்சியைத் தந்தது.

**காலந் தாழ்ந்தேனும் உணர்ந்த மராட்டிய மக்கள்**

பால்தாக்கரே நிறுவிய சிவசேனையினர், சகோதரர்கள் உத்தவ் தாக்கரே - ராஜ் தாக்கரே என இரு பிரிவாக உள்ளனர்; எனவே நாம் நமது ஹிந்தித் திணிப்பு விஷமத்தை இந்த சந்தர்ப்பத்தில் எளிதில் பயன்படுத்தி வெற்றியடையலாம் என்ற பா.ஜ.க.வின் ஆசையை, அங்குள்ள மராத்திய மக்கள் - காலம் தாழ்ந்தேனும் தெளிவாக உணர்ந்துவிட்டனர். (ஹிந்தி எதிர்ப்பே அவர்கள் இருவரையும் ஒன்று சேர்த்தது!)

முதலில் ராஜ்தாக்கரேவும், பிறகு அவரது சகோதரர் உத்தவ்தாக்கரே இருவருமே கடுமையாக இதனை எதிர்த்துப் பெரும் கிளர்ச்சி எதிர்ப்பு எரிமலையாக வெடிக்கும் என்று விடுத்த எச்சரிக்கையைப் புரிந்து கொண்டு - ஆட்சியையே இழக்கும் நிலைக்கு அது கொண்டு போகும் என்



பதை உணர்ந்த பட்னாவிஸ் தலைமையில் இருக்கும் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். அரசு, அந்த ஹிந்தித் திணிப்பு ஆணையை, அவசரமாக அமைச்சரவையைக் கூட்டி ‘வாபஸ்’ வாங்கியுள்ளது. மோடி, அமித்ஷா ஆர்.எஸ். எஸ். ஆகியோர் ஆசையும், ஆணையும் இனி ஒரு போதும் நிறைவேற முடியாது என்பது சுவரெழுத்துபோல நாட்டிற்கே துல்லியமாய் விளக்கி விட்டது.

**தேசிய மொழி என்று சட்டத்தில் உண்டா?**

“தமிழ்நாட்டில் தானே ஹிந்தி எதிர்ப்பு” என்று ஓர் அலட்சியச் சிரிப்புடன் - எகத்தாளமாக கேட்டவர்கள் இன்று மக்கள் உணர்வுக்கு முன் மண்டியிடும் நிலை கண்கூடு!

இந்தியஅரசமைப்புச் சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் உள்ள மொழிப் பிரிவுப்படி (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறுகள் (Anticles) 344(1) and 351) 22 மொழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதில் மற்ற மொழிகளைப் போல ஹிந்தி, சமஸ்கிருதம் போன்றவைகளும் உள்ளடக்கம் அவ்வளவுதான்!

தனியே ஹிந்தி மொழி ‘தேசிய மொழி’ (National Language) என்ற சிறப்புத் தகுதி எங்கிருந்து அதற்கு உள்ளது அரசமைப்புச் சட்டப்படி?

**மொழிப் பிரச்சினை உணர்ச்சி பூர்வமானது**

மற்ற மொழிகளுக்கு இல்லாத தனித் தகுதி ஹிந்திக்கு உண்டா? அதற்கு உண்டா?

அலுவல் மொழி (Official Language) என்பதுகூட ஒரே ஒரு வாக்கால் பலத்த எதிர்ப்புக்களிடையில் தான் அரசமைப்புச் சட்டத்தில் (அதுவும் தலைவரின் Casting Vote மூலமே) உள்ளே நுழைக்கப்பட்ட ஒன்று. ஹிந்தியின் வயது, காலம் எவ்வளவு?

மொழிப் பிரச்சினை என்பது உணர்ச்சி பூர்வமானது; ஏன் பிரிந்தது? பங்களாதேஷ் நாடு பாகிஸ்தான் எதனால் உருவானது? பாடம் பெற வேண்டாமா? சிந்திக்க வேண்டாமா?

**சிங்கப்பூரின் மொழிக் கொள்கை**

சிங்கப்பூரின் தலைசிறந்த ஆளுமையான, “நவீன சிங்கப்பூரின் தந்தை” என்று போற்றப்படும் பிரதமராக இருந்த லீக் வான்யூ அவர்கள் இரு மொழித் திட்டமே சிறந்தது என்று தனது ஆழமான சிந்தனைகளையும், செயலாக்கத்தையும் குறித்து தனது நூலில் எழுதுகையில்,

“72 சதவீத மக்கள் பேசும் மொழி, சீனமொழி. அதனை ஆட்சி மொழியாக்குவது சிறந்தது, என்று என்னிடம் பலர் சொன்னதைநான் ஏற்றுக் கொள்ளாமல் - மலாய், சீனம், தமிழ், ஆங்கிலம் எல்லாம் மதிக்கப்படும் மொழிகளாக்கி, ஆங்கிலத்தை ஆட்சிக்குப் பயன்படுத்தும் திட்டத்தை அறிவித்தது, அனைத்து மக்களையும் அது அரவணைத்துச் செல்லவும், சிங்கப்பூரிய கலாச்சாரத்தையும், ஒற்றுமையையும், ஒருங்கிணைப்பையும் உருவாக்கவும் பெரிதும் உதவியது” என்று அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

**அண்ணாவின் அறிவுரை**

அறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களவையில் பேசுகையில் அருமையான அனுபவ அறிவுரையை எழுதி ஹிந்தி வெறியர்களுக்கு விளக்கினார்.

“Unity என்பது நாட்டின் ஒற்றுமை. Uniformity யாக ஒரே மொழியாளும் ஒரே சீர்மை என்பது வேறு. இரண்டையும் குழப்பிக் கொள்ள வேண்டாம்” என்று கூறினார்.

தந்தை பெரியார் 1938இல் தொடங்கிய ஹிந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பும் - ஏன் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் இந்தியாவில் பிரதிபலிப்பது உறுதி! மேற்கு வங்கம், வட கிழக்கு, பஞ்சாப் மற்றும் தென் மாநிலங்களில் ஹிந்தி எதிர்ப்பு பரவியுள்ளது.

இதை உணராதவர்கள் பாறையில் மோதிக் கொண்டால் அவர்களுக்குத்தான் நட்டம் - புரிந்து கொள்வீர்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.3




அண்ணாநகர் வடக்கு பகுதி திமுக இளைஞரணி சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா, நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஆ. வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது, கூட்டத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, இளம் பேச்சாளர் அ.தா.டெக்சின் ரொமேரியோ ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், வட்டச் செயலாளர்கள் எம்.ஜி.ரவிக்குமார், பி.சந்திரசேகர், க.கோவிந்தராஜ், ஆ.ஏகாம்பரம், கு. பாபு, சி.பி..திருமலை, அருள்கண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.பிரகாஷ், கே.குட்டி, வி.தினேஷ் குமார், என்.மோகனவேல், இம்ரான் ஆருண், ஆ.மணிகண்டன் ஏ.கனகராஜ், எம்.சதாசிவம் எஸ்.ஜெய்சங்கர் ஜெ.பாபு ஏ.வேலு ஆர்.சுரேந்தர் ஜெ.சக்திவேல் எம்.சரவணன் ஏ.மதன்ராஜ் டி.அபிஷேக் எம்.சஞ்ஜய் மகளிரணி பி.சத்யா டி.சத்யா, கழகத்தினர் கலந்து கொண்டனர், எஸ்.முத்துக்குமரன் எம்.எஸ்.ராஜா பா.ஆனந்த் நன்றி கூறினர்.



பொறியியல் தரவரிசையில் மாநில அளவில் முதலிடம் பிடித்து காஞ்சிபுரத்திற்கு பெருமை தேடி தந்த மாணவி செல்வி சகஸ்ராவிற்கு காஞ்சி தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் சி. ராதாகிருஷ்ணன் நேரில் சென்று, காசோலை மற்றும் வாழ்த்துகளை தெரிவித்தார். உடன் கழக நிர்வாகிகள் தமிழ் அரசு, பாலமுருகன்,செல்வம், அண்ணாமலை, கந்தவேல், உள்ளிட்ட நிர்வாகிகள் இருந்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜோசப் சாமுவேல் தலைமையில்

# அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில் செம்மொழி நாள்! மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – நடிகர் நாசர் வழங்கினர்



சென்னை, ஜூலை 1 -

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில் மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா அம்பத்தூர் டெலிபோன் எக்ஸ்சேஞ் அருகில் வரும் உள்ள PSB Convention மகாலில் 28.06.2025 பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமையில், கழக பொருளாளரும் நாடாளுமன்றத் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, அமைச்சர் - மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் சென்னை வடகிழக்கு மாவட்டம் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், அம்பத்தூர் தொகுதி பொறுப்பாளருமான பி.முனியாண்டி, மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி தெற்கு பகுதி கழக செயலாளரும் மாமன்ற துணை தலைவருமான டி.எஸ். பி.இராஜகோபால் கிழக்கு பகுதி கழக செயலாளர் எம். டி.ஆர்.நாகராஜ் மற்றும் மரு. அணி.அமை ஜி.சாந்தகுமாரி த.செ.கு.உ. நீலகண்டன், மா.ஆதி.நல.அ LPF.மோகன் த.பொது.கு.உ DR.AP .பூர்ணிமா எம்.சி. மா.மீனவ.அமைது.ஆயிரம், மா.அமைப்புசாரா ஓட்டுநர்.அ.அ கு.கிருஷ்ணமூர்த்தி, மா.இ.அ.து.அ ஜெ. பாலமுருகன் மற்றும் அம்பத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள்

க.முரளிபாபு அ.செல்வம் க.கதீஜா, மா.ரமேஷ், வடக்கு பகுதி வட்ட செயலாளர்கள் வி.ரவீந்திரன், பு.வீரா, வெ. இராதாகிருஷ்ணன், மு.இரகு, எம்.கமல் , மற்றும்மாமன்ற உறுப்பினர்கள் க.பொற்கொடி , எஸ்.உமாசந்தானம் உஷாநாகராஜ் ஆகியோரின் முன்னிலையில், அம்பத்தூர் வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் பி.வி.மூர்த்தி, பொன்.நவராஜ் ரவி க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி எம்.ஹரி கிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி ஆ.இரா,அருண், கோ.சேகர்லால் ஆகியோரின் வரவேற்பில் தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் திரைப்பட கலைஞர் நடிகர் நாசர் அவர்கள் கலந்து கொண்டு சுமார் 300 மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கினார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் அம்பத்தூர் வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் பாகநிலை முகவர்கள், பல்வேறு அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் கொண்டார்கள். அம்பத்தூர் வடக்கு பகுதி 85வது வட்ட கழக செயலாளர் த.கண்ணபிரான் அவர்கள் நன்றியுரை வழங்குகிறார்...

### உயர்கல்வி பயிலும் திருநங்கைகள் – திருநம்பியர் இடைப் பாலினருக்கு

# கல்வி - விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கல்விச் செலவுகளையும் அரசே ஏற்கும்!

## சென்னை மாவட்ட ஆட்சியர் தகவல்!

சென்னை, ஜூலை 1 -

சென்னை மாவட்டத்தில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் திருநங்கை/திருநம்பி மற்றும் இடைப்பாலினர்களுக்கு கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கல்விச் செலவுகளையும் தமிழ்நாடு அரசே ஏற்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயனடைய திருநங்கைகள் எந்த வகையான பள்ளிகளில் படித்திருந்தாலும், உயர் கல்வி பயிலும் போது அவர்களும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களில் பயனடைய ஏதுவாக இத்திட்டங்களில் பயன்பெறுவதற்கான தகுதி வரம்புகளில் திருநங்கை, திருநம்பி மற்றும் இடைபாலினர் உள்ளிட்ட அனைத்து திருநங்கையர்களுக்கும் அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வியில் படித்திருக்க வேண்டும் என்ற விதிமுறையை முற்றிலுமாக தளர்வு செய்து அரசாணை பெறப்பட்டுள்ளது.

எனவே, இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விரும்பும் திருநம்பி, இடைபாலினர் உள்ளிட்ட அனைத்து திருநங்கையர்களும் தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை சான்றாக சமர்ப்பித்து, வருமான உச்சவரம்பு ஏதுமின்றி, பிற உதவித் தொகை ஏதேனும் பெற்று வந்தாலும் இத்திட்டத்தின் கீழ் பயனடையலாம். தொழிற்கல்வி, பட்டம், பட்டயம், பொறியியல், மருத்துவம் மற்றும் அதனை சார்ந்த படிப்பு, சட்டம், முதுகலை, முனைவர் ஆகிய உயர்கல்விக்கு இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயனடையுமாறு சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.




காஞ்சிபுரம் மாநகர 1வது பகுதி கழகத்தின் இளைஞரணி சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் பகுதி செயலாளர் கே. திலகர் தலைமையில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஆர். சந்தீப்குமார் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ , பேச்சாளர்கள் மா. பூபதி, காஞ்சி தாவூத் உரையாற்றினார். உடன் மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் மகாலட்சுமி யுவராஜ், அ. யுவராஜ், ப. சுகுமார், க. செல்வம், டி.ஜெய்கணேஷ், எஸ். செந்தில், கே. சண்முகம், எஸ்.வரதன், இ. சந்தானம், கே.எஸ்.வேல்முருகன், இ. இளங்கோவன், மண்டி கே. சம்பத், மாமன்ற உறுப்பினர்கள் சித்ரா ராமசந்திரன், இலக்கியா சுகுமார், சரஸ்வதி பாலமுருகன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



மதுரவாயல் வடக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக ஆட்சியின் நான்கு ஆண்டுகள் சாதனை விளக்க தெருமுனை கூட்டம் இளைஞர் அணி பகுதி அமைப்பாளர் எம்.பி.நவராஜ் தலைமையில் பகுதி செயலாளர் நொளம்பூர் வே ராஜன் முன்னிலையில் வட்ட கழக செயலாளர் எம் எம் ஜெயரத்தினம் , கே.நீலகண்டன் எம்.ஏ. செந்தில் சுரேஷ், கே.குமரேசன், ஆர்.கர்ணல், தீ.பாலாஜி,ஆ. மாலினி, எம்.உதயகுமார், எஸ்.ஜி.மாதவன், பா.ஆலன்.எம்.கே.பி.அண்ணாதாசன், சி.சசிகுமார், எம்.ரூபன், எம்.இ.ஸ்டாலின், ரமணி மாதவன், எம்.கே.பி.உதயசூரியன், எம்.சி.எழில்அரசு, எம்.பி.நவக்குமார், எம்.பி.நவசுந்தர், ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற்றது. காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிராபாகர்ராஜா எம். எல்.ஏ. , பேச்சாளர்கள் அரங்கநாதன், எஸ்.மாறன், இளைஞரணி ஜோயல், தொகுதி பொறுப்பாளர் பி.டி.பாண்டிச்செல்வம், ஒன்றிய செயலாளர், அயப்பாக்கம் துரைவீரமணி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.சங்கர் கணேஷ்,செ.ரவி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.